# 23 ஒவ்வொருநாள் கதைகள்

**இலக்கு**

*ஒவ்வொரு நாள் கதைசொல்லுதல் என்பது பெரும்பாலும் ஒருவர் தன் வீரதீரச் செயல்களையும் பட்டறிவுகளையும் உரைத்தல் பற்றியதாகும். இத்தகைய எளிமையான அடிப்படைத் தொடக்கநிலை முறையான கதை கூறுதல் உயர்தரக் கற்பனையை வேண்டிநிற்பதில்லை. ஆனால் எப்படியிருப்பினும் அது வாய்வெளிப்பாட்டுத் தகைமைகள், எழுத்துருவைக் கட்டமைத்தல், கேட்டல் ஆகியவற்றின் மேம்பாட்டுக்கு பங்களிக்கின்றன.*

மழலையர் - தரம் 9 | 10 - 30 மணித்துளிகள்

**நடைமுறை (நடைபெறக்கூடியவற்றின் தெரிவு):**

- "ஒழுங்குமுறை" வயப்பட்ட கதைசொல்லுதல் வட்டம் (பார்க்கவும் #17) பயன்படுத்தப்படாவிட்டால், ஒவ்வொருநாள் கதைகளுக்கு அறிமுகப்படுத்தல் ஆசிரியர் உள்ளீட்டிலிருந்து தோற்றலாம். எடுத்துக்காட்டாக, ஆசிரியர் ஒரு படத்தைக் காட்டுவார் அல்லது பேச்சுக்கதை ஒன்றைச் சொல்லத் தொடங்குவார், அதனைத்தொடர்ந்து மாணவர்கள் தொடர்வார்கள். மாணவர்கள் உன்னிப்பாகக் கேட்கின்றனர் அவர்களுடைய கதைகள் தொடர்புடையனவாக அமைகின்றன என்பதை உறுதிப்படுத்த, அவர்கள் தம்மிடையே கேள்வி கேட்கவேண்டும் மற்றும் ஒருவரை ஒருவர் குறிப்பிட வேண்டும். (பார்க்கவும் #12).
- மாற்றுவழி: ஆசிரியர் அல்லது ஒரு பிள்ளை ஒரு கலைப்பொருளை வகுப்புக்குக் கொண்டுவந்து அதுபற்றி சிலவற்றைச் சொல்கின்றது. இது யாரோ ஒருவரின் விருப்பமான பொருளாக, பிறந்த நாட்டிலிருந்து வந்ததொன்றாக, அல்லது அன்றாடம் பயன்படுகின்ற பொருளாக அமையலாம். மாணவர்களை ("அடுத்த கிழமை வகுப்புக்கு ஏதாவது கொண்டுவரவும்")என்று முன்கூட்டியே சொல்லிவைத்தல் பயனுடையதாகும்.
- ஒரு பிள்ளை ஓர் இன்றியமையாத நிகழ்வினை சொல்கின்ற வேளையில் அறிமுகம் இடம்பெறலாம், இது மற்ற மாணவர்களையும் இத்தகைய பட்டறிவுகளைப் பற்றி சொல்வதற்கு ஊக்குவிக்கும்.
- எதிர்வரும் பள்ளி நிகழ்வு, ஒரு சமய அல்லது வேறு ஒரு விழா ஒவ்வொருநாள் கதைசொல்லலுக்கு அறிமுகமாக அமையலாம்.

---

**குறிப்புகள:**

- ஒவ்வொருநாள் கதைசொல்லல் எளிமையான, முறைசாரா வகை உரைத்தல் ஆகும், ஆனால் அது எப்படி இருப்பினும் கவர்ச்சியான எடுத்துரைப்பாக அமையவேண்டும் (பார்க்கவும் உரைத்தற்கான முன்னூட்டற் குறிப்புகள் #22).
- இத்தகைய உரையாடல்கள் எப்போதும் வகுப்பு முழுவதையுமே உள்ளடக்கியதாக இருக்கவேண்டியதில்லை. சுருக்க இடைவேளைகள் அல்லது வகுப்புகள் தொடங்குதற்கு முன்னான நேரம் ஆகியவற்றையும் கதைசொல்லல் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம்.